ஹரி ஓம்

'நாயகி - நடனகோபாலர்'

சௌராஷ்ட்ர

- பஞ்சரத்ன மாலா - சரித்ர காவ்ய மாலா

(தமிழ்ப் பொழிப்புரையுடன்)

★

'நீங்களும் தெய்வீக இன்பம் பெற்றிடுவீர்'

என்னும் அனுபவ உரை இணைந்தது.

★

இயற்றியவர்:

'ஸித்த ஹரிகீதாநந்தா'

-: 1988 :-



8—8—1988 இல் மதுரை கீதாநடன கோபாலநாயகி மந்திரில் நடைபெற்ற நாயகி ஸ்வாமிகள் பஞ்சரத்ன மாலா—சரித்ர காவ்ய மாலா — நூல் வெளியீட்டின்போது மந்திர் தலைவர், உயர்திரு E.A.V. ரெங்காச்சாரி அவர்கள், நூலாசிரியரிடமிருந்து முதல் பிரதியைப் பெற்றுக் கொள்ளுதல்.

ʻ ஹரி நாமுன் பொ⁴ரெ தா:மூர்
—முரி பாபுன் த⁴மி ஜாயி।
ப⁴ஜெ தா:மூர் தெ¹ரெ நாமூர்
—ஹரி தி³வ்யம் அவி ராஹி ॥
—(ஹரிகீதம் - 4287)

ஹரி நாமங்கள் நிறைந்த விடத்தில் பாபக் கறைகள் மறைந்துவிடும்!

ஹரி நாம பஜனமுள்ள யிடத்தில் இறையருள் பரவி ஒளிவீசும்!!

ஹரி ஓம் !

ஜகத்குரு, மதுரை ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிநு - குரு ஸ்துதி - பஞ்ச ரத்ன மாலா - சரித்ர காவ்ய மாலா - ப : ல ஸ்ருதி

(பொழிப்புரையுடன்)

—★—

['நீங்களும் தெய்வீக இன்பம் பெற்றிடுவீர்' என்னும் அநுபவ உரை இணைந்தது.]

இயற்றியவர் :

'ஸித்த ஹரிகீதாநந்தா'

குண்டேன் ராஜா

—★—

வெளியிடுவோர் :

K. R. நாகலெக்ஷிமி,

சாலியா பிரசுரம்,

44. கிருஷ்ணன் கோவில் 3-ஆம் தெரு,

மானம்புச் சாவடி, தஞ்சாவூர்—613 001.

—★—

1988

[உரிமை பெற்றது]

ஹரி ஓம்

நாயகிஸ்வாமிகள் காவ்யமாலா

பொருளடக்கம்

1) மங்களாசாஸனம்

2) பதிப்புரை

3) ஸமர்ப்பணம்

4) முகவுரை

5) நாயகி ஸ்வாமிகள்
பஞ்சரத்னமாலா
சரித்ர காவ்யமாலா

6) பொழிப்புரை

7) பிழைதிருத்தம்

8) நீங்களும் தெய்வீக இன்பம் பெற்றிடுவீர்.

ஹரி ஓம் !



மதுரை

ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள்

ஸ்ரீ :

From

SRI KARYAM
SRI AHOBILA MUTT
ஸ்ரீ அஹோபில மடம்,
Camp : ஸ்ரீரங்கம்.

To

Sri K H. ராஜாராம்,
44, கிருஷ்ணன்கோவில்
3-வது தெரு,
M. சாவடி, தஞ்சாவூர்.
4—8—1988.

குசலம் : ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரம்மனே நம :

ஸ்ரீ மதே வண்சடகோப ஸ்ரீ வேதாந்த தேசிகாய தீந்த்ரமஹாதேசிகாய நம :

இப்பவும் மதுரை ஜகத்குரு ஸ்ரீமன் நடனகோபால நாயகி ஸ்வாமிநு பேரில் தஞ்சையம்பதி ஸ்ரீமான் K. H. ராஜாராம் என்ற சௌராஷ்ட்ர பிராம்மணரால் இயற்றப்பட்டிருக்கும் நாயகி ஸ்வாமிநு பஞ்சரத்ந மாலா, சரித்ரகாவ்ய மாலா என்னும் க்ரந்தங்கள் சௌராஷ்ட்ர பாஷையில் வெகு அற்புதமாய் சந்த அழகோடு இயற்றியுள்ளார். இதற்கானதமிழ் பொழிப்புரையும் இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இதன் விசேஷம் யாதெனில், இச்சரித்ர காவ்யமாலா, 1008 சொற்களாலும், பலச்ருதிமாலா 108 சொற்களாலும் அமைந்து சமஸ்கிருத சந்தஸ் போன்ற அழகுடன் இருப்பது ஸ்ரீஹரியின் வரப்ஸாதமாகும். ஆஸ்திக ஜனங்கள் இதனை அனுசந்தித்து ஸகல சௌபாக்யங்களையும் பெற்றுய்யுமாறு ஸ்ரீ லக்ஷ்மி நருஸிம் ஹனைப் பிரார்த்தித்து ஸ்ரீ அழகிய சிங்கர் அனுக்ரஹித்த மங்களா சாஸனத்தை நாம் இதன்மூலம் தெரியப்படுத்துகிறோம்.

(ஒ-ம்) பனமுகை வீ. நரசிம்மாச்சாரி
SRI KARYAM
(Private Secretary)
To H. H. THE JEER
SRI AHOBILA MUTT

ஓ

ஸ்ரீ முகம்

Sree Chandramouleeswaraya Namaha.
Sri Sankara Bhagavadpadacharya Paramparagatha
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi
Jagadguru Sri Sankaracharya Swamigal Srimatam
Samasthanam

KANCHEEPURAM—631 502.

Camp : 1. சாலைத்தெரு, பெரியகாஞ்சிபுரம்-Date—15-8-1988

To ஸ்ரீ K. H. ராஜாராமன்,
44, கிருஷ்ணன் கோயில் தெரு
மானம்புச்சாவடி, தஞ்சாவூர்-613 001.

வாழையடி வாழையாக சித்தர் பெருமக்கள் வாழ்ந்துவரும் இந்த நாட்டின் பெருமையைத் தன் வாழ்வால் வளர்ந்த பெருமை யுடையவர் ஸ்ரீ நடன கோபால சுவாமிகள்.

இவருடைய வாழ்க்கை வரலாற்றை ஸௌராஷ்ட்ரம்—தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஆக்கித் தந்துள்ளார் தஞ்சாவூர் ஸ்ரீ K. H. ராஜாராமன்.

நல்ல நூல்களைப் படிக்கும் பழக்கமுள்ள வாசகர்கள் தங்கள் கடமையுணர்ந்து இத்தகைய நல்ல நூல்களை மேன்மேலும் அளித்து வர இவரை ஊக்குவிப்பார்களாக !

(ஓ-ம்.) நாராயணஸ்மிருதி.

BIBLIOGRAPHICAL DATA

Titlet	—	NAYAKI - NATANA GOPALAR (PANCHARATHNA — CHARITHRA KAVYA MALA)
Composer and Editor	—	'Siddha Harigeethananda' Kundain Raju (K.H. Rajaram)
Subject	—	Hymnal and Lyrical Poems with regard to Sriman Natana Gopala Nayaki Swamigal.
Language	—	Sourashtra Language in Tamil Script.
Paper kind	—	White News Print
Pages-Size-Copies	—	46 Pages - 1×8 D. Dy. - 14·2 Kg. Copies 800.
Price	—	Rs. 5-00

ஓம் ஸித்த குருப்யோ நம :

பூஜ்யஸ்ரீ ஸித்த நரஹரி குருஜியின்

மங்களா சாஸனம்

சுந்தர ஸௌராஷ்ட்ர மொழியில் நாலாயிரத்திற்கு மதிகமான திவ்ய ஹரிகீதங்கள் பாடி, மதுரை ஸித்தாச்ரம ஸித்தாலய பகவான் ஸ்ரீஸித்த குருஹரி சன்னிதியில் அரங்கேற்றியவர் தஞ்சையம்பதி 'ஸித்த ஹரி கீதானத்தர்' ஸ்ரீ K. H. ராஜாராம்।

பகவான் அருள்பெற்ற அவர், இப்பொது ஜகத்குரு ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகளுக்கு பஞ்சரத்னமாலையும், திவ்ய சரித்திர காவ்ய மாலையும் அற்புதமாக ஆக்கி அணிவிக்கின்ரார்।

பஞ்சரத்ன மாலையில் பெரும்பான்மை ஈரெழுத்துச் சொல் மணி களாகவே கோர்த்து ஸௌராஷ்ட்ர மொழியின் இயல்பான இனிமை, எளிமை, எழில் நலம் துலங்கப் படைத்துள்ளார்.

நாயகி ஸ்வாமிகளின் திவ்ய சரிதாம்ருதத்தை 112 அடிகளில் சுவையாக வழங்கியுள்ளார். நூற்பயன் பலஸ்ருதியும் இணைந் துள்ளது.

பக்தி மார்க்க சீலர்கள், தாஸானுதாஸர்களின் அனுஸந்தானத் திற்கு உகந்த, உயர்ந்த பயன்மிகு தொண்டினை ஸ்ரீராஜராம் ஆற்றி யுள்ளார்.

அவர் தொண்டு மேன்மேலும் சிறப்புற்று ஓங்க, ஸகலரும் ஸகல ஸ்ரேயஸ்களும் பெற்றுய்ய பல்லாண்டு பல்லாண்டு பன்னலத்துடன் அவர் வாழ பகவான் ஸ்ரீஸித்தகுரு ஹரியைப் பிரார்த்தித்து மங்களா சாஸனம் செய்கின்ரேம். ஓம் ஸித்த ஓம்।

குருபூஜ்யர் அருளாணைப்படி,

மதுரை
9—6—'88

(ஒ-ம்) **கே. ஸ்ரீராமநாதன்**
ஸித்தாச்ரம ஆட்சிக்குழு உறுப்பினர்

ஹரி ஓம் ।

கு³ரு ஸ்துதி

—:0:—

மதுராபுரி கா²முரு ஸௌரகுல பாப்³ரெங்கா³ர்யான் ।
2 மாய்திஸ லெக்ஷ்மி பெ⁴ய் தெங்கயுஜெ ஏ-தே³வுன் ।।

ஜாபாலி கோ³த்ரும் ⁶ கொப்பான் ⁷ மெனன் நாம் கே⁴ரும் ।
4 அவதார் பொடி பொ⁴ரெ³பு⁴லகு ரொண்டெ தி³க்யதீ³பம் ।।

தெ⁴ர்னிமு திஸ யோக³ எத்³தி³ன் மொளுங்குரு
ப்ர²ம்மச்சர்யம் ।
6 பொட்னிமு ஸெங்க ப⁴க்தி ஹோரும் ப⁴ஜனெ
ஸ்ரீஹரிக்ருஷ்ணம் ।।

குண்டேன் ராஜுனி ஹரிகு க²வி ஸாயுஜ்யம்
தெ⁴ரெ-தே மஹநீயம் ।
8 பொடரேஸ் தெகமீ திஸதே கு⁴ரு ஸ்ரீநடன கோ³பாலம் ।।

ஹரி ஓம் !



மதுரை

ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகள்

நாயகி ஸ்வாமிகள்
மூலவர் — அர்ச்சாமூர்த்தி



நாயகி ஸ்வாமிகள்
உற்சவர் — அலங்காரமூர்த்தி

ஸ்ரீ ஹரி.

பதிப்புரை

மறை ஞானம் என்னும் குறைந்து காணப்படுகின்ற இக்காலத்தில், விழுமிய விழுப்பொருளைப் பற்றுவதற்கு எற்றச் சுலபமான வழி திவ்யநாம பஜனமே என்று வருத்துத் தந்தனர், ஆன்றோர்!

இவ்வழி பாரத நாடு முழுவதும் பரவி காணப்படினும், மராட்டியப் பெருமண்டலத்தில் தோன்றிய பஜன ஸம்ப்ரதாயம் பெரும் பான்மையினரை ஈர்த்துள்ளது!

இப்பாணியில் தம் பக்தியை வளர்த்துக் கொண்டு கால்களில் சலங்கை ஒலிக்க, நாக்கிலே ஹரி நாமம் தவழ, மனதிலே ப்ரேமை பொங்கக் களிநடம் புரிந்தவர் நம் நடன கோபால நாயகி ஸ்வாமிகள்!

இந்நூலாசிரியர், இச்சுவாமிகளின் சௌராஷ்ட்ர மொழி ஹரி கீதங்களிலும், வாழ்க்கை வரலாற்றிலும் பெரிதும் கவரப்பட்டு, ஒரு நாள் தம் உன்னுணர்வு உந்த இவர்மீது இக் காவ்ய மாலாவை இயற்றும் பேற்றினைப் பெற்றார்! தனக்கு இவர்பால் விளைந்த பக்திப் பூரணயறுபவங்களை ஏனையோருந் துய்க்கக் கருதி, 'அறுபவ உரை' என்ற பகுதியையும் இத்துடன் வழங்கியுள்ளார்.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக அவ்வப்போது இவருக்கு அருளப்பட்டத் தெய்வீக உணர்வுப் பெருக்க உந்துதல், நாலாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட சௌராஷ்டிர ஹரி கீதங்களை இயற்றப் பெரிதும் உதவியது! பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட இக் கீதங்களனைத்தும், 27—7—1986-ல், மதுரை ஸித்தாச்ரமத்தில் அரங்கேற்றப்பட்டு, அறிஞர்கள் பலரால் பாராட்டப்பட்டவை என்பது நோக்கற்பாலது!

இதனை நோக்கும் போது, பந்தர்பூர் விட்டோபா என்னும் விட்டலநாதனை நாளும் போற்றிப் பணிந்த துகாராம் ஸ்வாமிகள் பாடிய 4600 மராட்டிய அருளிச் செயல்கள் (அபங்கங்கள்) நினைவிற்கு வருகின்றன! நாகரீகம் என்ற பெயரால் ஆன்மீக நாட்டம் குறைந்து வரும் பகுதிகள், இந்நூலின் வழி முறைகளில் தினைத்து நிற்கத் தலைப்படுமானால், அதுவே இந்நூல் வெளியிட்டின் பெரும் பயன் எனக் கருதி மகிழ்வேன்!

இதில் கொடுக்கப்பட்டுள்ள இந்நூலாசிரியரின் பூஜாவிதி முறைகளைச் செவ்வனே கடைபிடித்துத் தெய்வீக அநுபவ ஆனந்தத்தைப் பெறத்துடிக்கும் பக்த சீலர்களின் பொன்னர் திருவடிகளை, மெய்மொழி மனத்தினுல் வணங்கி இந்நூலை வெளியிடுகின்றேன்.

தஞ்சாவூர்,
30—7—1988

K. R. நாகலெக்ஷ்மி,
பதிப்பாசிரியை.

ஹரி ஓம்!

மதுரை ஸ்ரீமந் நடன கோபால் நாயகி ஸ்வாமிநு
பஞ்ச ரத்ன மாலா, சரித்ர காவ்ய மாலா.

அரங்கேற்ற நூல் வெளியீட்டுப் பதிப்பு.

ஸமர்ப்பணம்

ஸ்ரீ ராம கைங்கர்யத்திற்குத் தன் வாழ்நாளில் பெரும் பகுதியை யர்ப்பணித்துக் கொண்ட எனது பாட்டனார் பரமபத மடைந்தையர்வான், எனது முன்னறிதெய்வங்களான என் தாயார் நாகலம்மை யார், தந்தையார் ஹரிஸ்வாமய்யான் ஆகிய இவர் களின் நிகரவஞ்சலியாக, அவர்களின் பொற் பாதங்களில் இந்நூலை ஸமர்ப்பணம் செய்கிறேன்.

ஹரி ஓம்!

முகவுரை

பெறுதற்கரிய இம் மானிடப் பிறவி ஆறறிவு கொண்டு பிற உயிரினங்களைவிட உயர்வானதாக விளங்குகிறது! இத்தகைய பிறவியின் இறுதிக் குறிக்கோள் மீண்டும் பிறவாமலிருப்பதே. உள்ளுவதெல்லாம் உயர்ந்ததாகிச் சிறப்பான செம்பொருள் ஒன்றை காண்பதே இப்பிறவியின் பயனாகும்

'கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி' எனவும், 'பிறப்பென்னும் பேதைமை நீங்கிச் சிறப் பென்னும் செம்பொருள் காண்பதறிவு' என வும் பேசினர் திருவள்ளுவர்!

விஞ்ஞான வளர்ச்சியில் வானவெளியில் ஆய்வு செய்யும் விஞ்ஞானியின் புதிய படைப்புக்கள் யாவும், பௌதிகப் பருவுடலின் புலனுகர்ச்சிப் பசியை நிறைவேற்றும் குறிக்கோளுடையவை. பலகாலும் பயின்று ஈட்டிய பொருளனைத்தையும் செலவழித்துப் பெறப்படும் பற்பல நவீனங்கள் மனிதனுக்குப் பூர்ணமான மன நிறைவையும் அமைதியையும் அளிப்பதாயில்லை. பலவகையிலும் செல்வச் செழிப்படைந்த பல நாடுகள் ஒன்றேடொன்று உறுமிக் கொண்டிருப்பதைக் காண்கிறேம்! உலகெங்குமுள்ள மக்களில் பெரும்பாலோர் சினம், பேராசை, பொருமை, ஆணவம் போன்ற இயல்பூக்கங்களுக்கு அடிமையாகி, ஏமாற்றம், குழப்பம், மனநோய், சித்தப்பிரமை, தற்கொலை போன்ற அழிவுக்குழியில் விழுந்து வருதைப் பார்க்கிறேம்.

குறுகிய ஆயுள், வரம்பான செல்வம், பருவ காலங்கள் வழங்கும் இயற்கை வளம் இவைகளைக் கொண்டு உயிர் வாழும் மனிதன், எக்காலத்திற்கும் எத்தகைய சூழ்நிலையிலும் மனயமைதியைக் கொண்டு வாழக்கூடிய ஒரு ஆளுமைப் பொருளை நாடுகிறான்! இதற்காகவே நம் ஆன்றோர்கள், மக்களின் மருள்நீங்கி அருள் வழங்கும் மெய்விளக்கக் கோட்பாடுகளைப் பரப்பிச் சென்றுர்கள். இவை பொருள், இடம், காலத்திற்கேற்றவாறு பயன்படு முறையில் வகுக்கப்பட்டமையால், புறத்தே ஒன்றிற்கொன்று முரணுடையவை யாய்த் தோற்றமளிக்கிறது. ஆனால், உண்மையில் அவை மெய்ப் பொருள் ஒன்றிற்கு யிட்டுச் செல்லும் கலங்கரைவிளக்காகும்.

பரமபத
குண்டேன் மீனாக்ஷய்யான்

பரமபத
குண்டேன் ஹரிஸ்வாமய்யான்

குண்டேன் நாகலம்மையார்

வலிமைகுன்றிய மக்கட் பெருக்கம் கொண்ட இக்காலத்திய மனிதனின் உள்ளம் எளிதாகப் பற்றக்கூடிய மிக எளிய மார்க்கமே பஜனை மார்க்கம்! ஞானப்பாலுடன் பக்திக்தேன் தோய்ந்த பஜனை மிர்தம் தரும் திவ்ய நாமங்களின் மாபெருஞ் சக்தியால் இறையருள் பெற்று உய்ந்தவர்கள் பல்லாயிரக்கணக்கானோர் ஆவர். இவர்களுள் ஒருவராக விளங்கியவரே நம் மதுரை ஸ்ரீமத் நடன கோபால நாயகி ஸ்வாமிகள்!

எழுதரு மறைகள் தேறா இறைவனைக் காண நினைத்துத் தனிமையை நாடினேன். மேகங்கள் கொஞ்சும் முகடுகளைக் கொண்ட மலைச் சாரல்கள், தெள்ளிய நீரோடைகளின் பொலிவு பெற்றப் பூஞ்சோலைகள், வளம் பல நல்கும் நீண்ட நதித் துறைகள் போன்ற இடங்களிலேச் சுற்றித் திரிந்தேன்! 'ஹ்ரீம்.....க்லீம்' முதலான மந்த்ரச் சொற்களைப் பயின்று சமாதி யோகங்களில் முயன்று பார்த்தேன்! ஆனால், கட்டுக்கடங்காத அலைபாயும் என் கள்ள மனம் துள்ளிக் குதித்து வெளியே சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது!

இந்நிலையில் ஒரு நாள், நம் நாயகி ஸ்வாமிகளின் திருவுருவப் படம் ஒன்றைப் பார்க்க நேர்ந்தது. முதலில் 'இவர் யாரோ ஒரு பிச்சை கேட்கும் பஞ்சப் பரதேசி' என துச்சமாக எண்ணியிருந்தேன். ஆங்காங்கே ஒரு சிலரால் வெளியிடப்பட்ட இவரது சரித்திரத்தைப் படிக்கும் வாய்ப்புகிட்டியது. என்னையும் அறியாமலேயே ஒருவித பயபக்தி இவரிடம் ஈர்க்க ஆரம்பித்தது!

முதலில் சைவராகச் சித்திகள் பல பெற்ற யோகியாக விளங்கி, பின்னர் பேயாழ்வரால் வைணவராக்கப்பட்டத் திருமழிசையாழ்வார் போலவும், பரம்பரை சைவ குடும்பத்தில் தோன்றிய லீலாசுகர் என்னும் பில்வ மங்களர், கண்ணன் கழலினைப் பற்றும் வைணவராக வாழ்ந்து வந்ததையும் இந் நாயகி ஸ்வாமிகளின் வரலாறு நினைவூட்டுகிறது.

இவற்றுள், சைவ வைணவ கோட்பாடுகளில் பேதங்கள் கற்பிக்கப்பட்டு உயர்வு தாழ்வு மனப்பான்மை கொள்ளுதல் அறியாமையாகும். 'ஸ ப்ரம்ம, ஸ சிவ, ஸ ஹரி' என்றதனால் எல்லாம் ஒரே பொருளைக் காட்ட வந்தவையே! கோவிந்தனேத் தொழுவோர் சங்கரனையும் தொழுவதற்கொப்பாகும். ('ஏ நமஸ்யந்தி கோவிந்தம், தே நமஸ்யந்தி சங்கரம்') ஆதி சங்கரரும் விஷ்ணு பரமான 'கோவிந்தாஷ்டகம்' போன்ற உயரிய நூல்களை வழங்கி

யுள்ளார். எனவே, சைவ வைணவ கோட்பாடுகள் ஒன்றிற் கொன்று இணைந்து மெய்யறிவைப் பரப்பி வந்தன. வேற்றுமை களும், குதர்க்கங்களும் பின்னால் வளர்ந்த காழ்ப்புணர்ச்சியால் விளைந்தவையாகும்.

பல சான்றோர்கள் வாயிலாக மேலும் நாயகி ஸ்வாமிகளின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கேட்டறிந்த நான், ஒரு நாள் மதுவுண்ட வண்டுபோல் ஸ்வாமிகளின் கீர்த்தனைகளில் லயித்து மயங்கியிருந்த வேளையில், என் உள்ளுணர்வால் உந்தப்பட்டு இவர்மீது இப் பஞ்ச ரத்ன மாலாவையும், சரித்ர காவ்ய மாலாவையும் இயற்றும் பேற்றினைப் பெற்றேன் !

இந்நூல் அரங்கேற்றப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்பு; ஒரு சுக்ல பட்ச பஞ்சமி திதி। உஷத் கால வேளையில்। பஞ்சமுக குத்துவிளக்கில் தீபமேற்றி வைத்து, சந்தன குங்கும திலகமிட்டு, மணமுள்ள மல்லிகை மலர் அணிவித்து, தசாங்க தூபங் கமழ, கற்பூர தீபாராதனை கொண்ட உபசார பூஜைகளைச் செய்துமுடித்த பின்னர், இந்நூலைப் படிக்கத் தொடங்கினேன்। தொடர்ந்து இதே வேளையில் தினமும் பாராயாணம் செய்து பௌர்ணமி திதியில் முடித்தபோது, இடையே ஒரு நாள் யாரோ ஒரு திவ்ய புருஷன் அருகிலமர்ந்து செவிமடுத்தக் காட்சி, ஜல்ஜல் என்று ஒலிக்கும் சலங்கை ஒலி, என்னைப் பெரிதும் வியப்பிலாழ்த்தி என் உடல் முழுதும் புல்லரிக்கச் செய்தது.

முன்னர் என் மனம் அடங்கப் பயின்ற உபாயங்கள் பலவும் எனக்குத் தோற்றவிடத்து, அங்கே மனயமைதி, ஒருவித விழிப்பு, இனந்தெரியாத இனிய அலைகள், இவை ஒன்றன்பின் ஒன்றாக என்னுள் புகக் கண்டேன்। சுற்றித் திரிந்த என் மனம் இச்சுவாமி களின் திருவுருவத்தில் மெதுவாக லயிக்கத் தொடங்கியது ! ஒரு வித புத்துணர்வைத் தூண்டும் மனோகரமான இன்ப மழையில் நனைந்து கொண்டிருந்தேன்। அடங்காத என் மனம் மெல்ல அடங்க ஆரம்பித்தது।.

'சஞ்சர கதர ஸுதா மதுரத்வனி முகரித மோகன' க் கண்ணனின் வேய்ங்குழல் நாதம் காற்றிலே மிதந்து வந்தது। 'கந்தர்ப்பச் சூர்ய கோடி ஸௌந்தர்ய ஸுப ரூப' னை கார் வண்ணனின், கிரங்க வைக்கும் பேரழகு என் மனக் குகையில் புகுந்து கதிரொளி வீசிக் கொண்டிருந்தது !

இத்தகைய திருவருளை நல்கிய நாயகி ஸ்வாமிகளின் பெருங் கருணை வீச்சு எல்லோர் மீதும் பரவ வேண்டும் என்று நினைத்த நான், 'யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என எண்ணி, இக்காவ்ய மாலாவை நூல் வடிவில் உலகிற்கு வழங்க வேண்டும் என்ற காரணங்கொண்டு, இதற்கான ஆவன செய்து முடித்தேன்.

இந்நூலைக் கண்ணுறும் சான்றோர்கள் மேலும் இந்நூலின் மேம்பாட்டிற்கானவற்றைத் தெரிவிப்பாராயின், அவற்றைச் சிரமேற் கொண்டுச் செயலாற்ற என்றென்றும் காத்திருக்கிறேன்.

இந்நூலின் பொழிப்புரை பகுதி, பக்கம் 10ல் காணும் அச்சுப் பிழை திருத்தங்களைப் பயன்படுத்திக் கொண்டு பாராயணம் செய்யு மாறு அன்பர்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்நூல் வெளியீட்டிற்கு முதன்முதலாகப் பெரிதும் ஊக்க மளித்து மங்களாசாஸனமும் அருளிய, மதுரை பூஜ்யஸ்ரீ ஸித்த நரஹரி குருஜி அவர்களுக்கும், போட்டோ பிளாக் கொடுத்தும், நாயகி ஸ்வாமிகளின் வரலாற்றுநிகழ்ச்சிகளைப் பற்றி ஆங்காங்கே நேரில் சென்றுச் சரித்திரச் சான்றுகளைச் சேகரித்துத் தந்த நாயகி ஸ்வாமிகளின் பரம பக்தருமான, மதுரை பிரபல வர்த்தகர் ஸ்ரீமான் ராணி சுந்தர்ராவ் அவர்களுக்கும், மதுரை கீதா நடன கோபால் நாயகி மந்திர் செயற்குழுவிற்கும் நான் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைபட்டுள்ளேன்.

சௌராஷ்ட்ர மொழி யறியாதிருந்தும், சௌராஷ்ட்ர காவ்ய மாலா அடங்கிய இந்நூலை மிக்க அக்கரையோடு அச்சிட்டுத் தந்த தஞ்சை திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் என் நன்றி உரித்தாகுக.

இந்நூலை அனுஸந்தானம் செய்யும் சீலர்கள், நாயகி ஸ்வாமி களின் பால் பக்தி பூண்டு, ஹரி நாமதிவ்ய பஜனங்களில் பரவஸமாகி திருவருள் பெற்றுய்வாராகில், அதுவே இந்நூல் வெளியீட்டின் பெரும் பயனுகும்.

மேலும், என் வேண்டுகோளுக்கிணங்கி மனமுவந்து ஆசியுரை வழங்கிய, அஹோபிலமடம், ஜீயர் ஸ்வாமிகளின் பாதகமலங் களுக்கு அடியேனுடைய அனந்தகோடி நமஸ்காரங்களைச் சமர்ப் பிக்கிறேன்.

'புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும்—செய்யாது, இகழ்ந் தார்க்கு எழுமையும் இல்' என்றார் தெய்வப் புலவர்!

21—7—88
தஞ்சை

'ஸித்த ஹரி கீதாநந்தா'
K. H. ராஜாராம்,
ஆசிரியர்.

ஹரி ஓம்

மதுரை ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிநா

பஞ்சரத்ன மாலா - சரித்ர காவ்ய மாலா

முதற்பதிப்பு - 1988

8—8—1988 இல் மதுரை கீதாநடன கோபால் நாயகி மந்திர் சங்கீத மகாலில் அரங்கேற்றப்பட்டு வெளியிடப்பட்டது.

ஹரி ஓம்

மதுரை, கீ/தா நடன கோ³பால நாயகி மந்தி³ரில்,
..... தேதி யன்று அரங்கேற்றப்பட்ட
வெளியீட்டுப் பதிப்பு !

இசையறிஞர்கள், தந்தமக்கு இயைந்த ஸ்ஸ்வரங்களில்
சௌராஷ்ட்ர மொழியிலமைந்த இக்காவிய மாலாவை,
இசையறிஞர்கள் தந்தமக்கு இயைந்த ஸ்ஸ்வரங்களில்
அமைத்துப் பாடி மகிழலாம் !

உச்சரிப்பு முறை ; உதாரணம் : க = Ka , க: = Kha ,
க³ = Ga , க⁴ = Gha

ஜகத்குரு ஸ்ரீமந் நடன கோ³பால நாயகி ஸ்வாமிநு பஞ்ச ரத்ன மாலா

—:0:—

ஹரி க³வி லாஜ் ஸொடி நசி பொ³வி
தெ⁴ரி தெக-பாய் மொன் தெம ரஹி !
ஹொடி தெம மிளி திஸ ஸன்-மதி
செடி ஜிவெ ஸ்ரீமந் நடன
— கோ³பால் நாய³கினு-தெக³ நமாமி நமாமி ॥

சிவ-சிவ மெனி தெ⁴ரி ரி:ய வாட் ஸொடி
ஹரி-ஹரி மெனி ப⁴ஜி நாம் தெ⁴ரி தகி !
கலி-தகெ-திஸ-வாட் ஹரி-கீ³த் க³வி
ஜிவி-பொடெ ஸ்ரீமந் நடன கோ³பால்
-நாயகி³னு-தெக³ நமாமி-நமாமி ॥

ஆஸா-பாஸ-பஸெ-திஸ பீ⁴ர் தெ⁴ரை !
தூப்-ஸொடெ-ஹுள-திஸ தேட் லகை³ !
மோஸ்-கீஸ் யேட் தெம கெரி ஸொடை
மெனி ஜனெ ஸ்ரீமந் நடன கோ³பால்
- நாயகி³னு-தெக³ நமாமி-நமாமி ॥

கிஸ-திஸ ஜிவிகாய் ஏட் யமி
கோட்பொடை-பொஸி-பாப் தெ³ஸி-தெ³னி !
ஹோட்-ஹோர் ஸுசி-ருசி பீ⁴ர் ர:னி
கக³-திஸ மெனெ ஸ்ரீமந் நடன கோ³பால்
-நாயகி³னு-தெக³ நமாமி-நமாமி ॥

உஜி-மொரி-ஜான் திஸ வாட் ஸொடி
பொ⁴ரி-பொடி ரா:ன் திஸ வாட் தெ⁴ரி !
கு³ண்டேன் ராஜுனி ஹரி ஹடெதென ம:ளி தொ³ளா
-மாய்-தா:ம் உஜி !
ரி:ய ஸௌர-குல ஸ்ரீமந் நடனகோ³பால்
நாயகி³னு தெக³ நமாமி நமாமி ॥

விஷயால்-ஏ ஸட்டிஸ்வாமிநு மாய்
-ஜொவன் ஸங்க³ணூர் மாய்தேட் ப்ரவேஸம் ।
காமுரவி கி³ருகஸ்தன்க ஜீவ்மெனி
-தெகமாய் திஸ பொ³வ்னம் ॥

பே⁴திமு மொரந்தி³ய பெ⁴ய்ஞன்-தீ⁸தெனு
-உராவ் பொடி தெபிஞ்செ தெக ஜிவ்னம் ।
நரஜெலும் லக்ஷ்யந் தெ⁴ரந்-தெக
-ஒப்பனுர் மாய்கரெ -த்³யஜம் ॥

மாய்-தெக-ஹதார தெ⁴னி திஸ ஆஸிமு
-க:ள்ளியேஸ் பி³க்ஷா-பாத்ரம் ।
கு³ரு-திஸ·ராஹ்ஞ தபஸொண்டெயேடு
-ஸித்⁴தி³கிஸதேட் பொடன் ॥

பொரங்குடி,தெ⁴வ்ரொ-பருத்தியூரம்மன்
-திஸதே டொண்டெ³ கு³ரு-தே-ஸ்வாமிந் ।
ராமலிங்க³-ஸிஷ்ய-நாக³லிங்க³ம்
-மென்னுர்-தெக-திஸ-கரஸி பாதசரணம் ॥

ஸித்⁴தி³னு தெ⁴ரன்பொடந் தி⁴யஸ்
-தேட்யப்³யாஸ் திஸதே சிவராஜ-யோக³ம் ।
பா³ர்-ஹாத் உஞ்சொ-செடன்-யோக்³திஸ
-தேஸித்⁴தி³ ஸனிமு கு³ருக் ஹொயஸி-புளகாங்கி³தம் ॥

'ஸதானந்த³ சித்தர்' மெனி திஸ பொ³வி
-தெக க⁴னங் கரெஸி கு³ரு-தெக மாபா³ப்-சித்தம் ।
க்ருதமால்-நெத்³தி³-கெட்டரு மாபா³ப்
-ஸமாதிக் ஸொளுங்குங் கராஸி யஞ்சலி -புஷ்பம் ॥

ராம்நாத்-ரஜஸேதுபதி தெக கரஸி
-மர்யாத்-உபசார் பாத³ ஸேவிதம் ।
பா³ர்-ஓர்ஸு மோனஸ்வாமின்க³ த்³யாந்
-தபஸ்-திஸ-மௌன-வ்ரத³ம் ॥

அண்ட³ம்-பொ⁴ரெ ஜீவ்ஸக்தினு
-பிண்ட³ந்-தெம திஸதெங்க தெ³னிதே-கைவல்யம் ।
ஓஜஸ்-திஸ-தேஜஸ்-பொ⁴ரெஸி தெங்க³தேட்
-தெம முகா³ர விந்த³ம் ॥

விஸிஞ்ஜந்-தி³ய பூ:ல்தே ஜகதுர் தியஸி
-தெங்க³ கீர்த்தி-ஸுக³ந்த³ம் ।
மதுரொ-தே-தெனுயுஜெ-கா³முகு
-பி:ரியவாஸி கு³ரு-ஆக்ஞாம் ॥

வாடுமு ரஜ-திஸ கௌ³ரி³வல்லபத்
-தேவர் ரஹந்தி³யஸிதெங்க³ தேட்சிவக³ங்கா³-ஸமஸ்தானம் ।
52 ஏ³தே³வுனு அஸல்யி-பொகல்யி ஜன்லன்
-பொடந் தெம ஹொயஸி-தேட் பரிசோதனம் ॥
பி³ல்ல-தொ:வி கு³ம்பெ³-வெனி
கெ⁴ந்த³ல்-கள-லாஹ்ட்-திஸ-கே:ஸம் ।
54 வில்லு-ஸொக-பயினிங்-கஜள்-கெ³ண்டெ³
-ம:ளி-திஸ மோஹ நயனம் ॥
ஸ்ருங்கா³ர்திஸ வத்தகரன் ரவுளு
-பொ⁴திரிந்-தேட் லிம்புவநி வநிதம் ।
56 திஸா னொண்டெ³-தெக³-தே³வுன்-ஜொவள்
-த⁴ட்³டி³-தேட்-ரஜ-தகெஸி பீ³க்-க்³ருஹம் ॥
ஸித்³தி³-கே:ளும் மஹிமெ பொந்தெ³
-தே³வுனெனு ப⁴ராடவாஸி-தேட்-அத்³புதம் ।
58 பி:ர் ரொண்ட்வாள் பீ⁴ர்ரடுகும்
-மண்ட³ல மொண்டே³ ரஹந்தி³யாஸி-ராஜயோக³ம் ॥
மஹிமெந்-திஸாம்-தே-தே³வுனுக்
-தெ³க்கினிம் ஹொயஸி திஸ ரஜோ ஸிஷ்யம் ।
60 ஜஹ்கெ-தா:ம்திஸ-பா:டுர் மது³ரெம்
-யவன்-பொடெஸி தேட்தெனுமாயம் ॥
'விடின்-தோப்' தேட்-தெங்க³ ஆயாஸ்
-ஹோங்கு³ரு நீடக நாக³ஸர்ப்பம் ।
62 ஸித்³தி³னு-திஸ பொ³யஸ்தெ கரந்
-தி³யாஸி-யேட் தே³வுந்-தே-விநோத³ம் ॥
ஹொயதிங்காய் தெங்க³மொன்னு
-பொ⁴ரெனினு தெம-திஸ பிராராப்தம் ।
64 பூர்வஸுகிர்துந்-தெ⁴ரெ-வஸ்நாந்-தெங்க³
-ப³க்தி தெமதே ஸ்ரீக்ருஷ்ணம் ॥
திருகுருகூர் குருவுந்திஸ வட⁴பத்³ர
-ஆர்யான் தெ³க்கனுக் தெங்க³திருநக³ரி -பிரயாணம் ।
66 வாடுமு 'ஸாத்தூர்' ராணுமு வேத³னுந்
-தெங்க³ தி³யாஸி ஜொட்³ட³-சோருன் ॥
அம்செஸி தெங்க³-தொ³ளானு மத்திபு:வனுர்
-திஸதே³வுனு-தி³ய ஸாபம் ।
68 பி:ர்தே தொ³ளானுக் த்³ருஷ்டிந் தெனு தி³யாஸி தெங்க³
சரண்ஹால் பொடி .க்ஷமம் ॥
ஸித்⁴தி³னு திஸ முக்திக்கம்க வாட்
-ப⁴ந்த³ன் பொடயி கே:ள் ஜாலம் ।
70 நித்யானந்த³-ஸாயுஜ்யந் தெ⁴ரந்தகெ
-வாடுகு ஹோய்-தே-பிரதிகூலம் ॥

உபதே³ஸ்-திஸ தெ⁴ரனுர் தி³யஸி
-தே³வுனுக் ஆர்யான் ஸமாச்ரயண-முத்³ரதா⁴ரணம் ।
ஹரிஜுத-க³தி-கோனம்க. திஸதே³வுனுக்
-தேட்தி³யஸி க்³யாநம் ॥

த்³வையம் ஸரமஸ்லோக் அஷ்டாக்ஷர
-மந்த்ரஸார தி³வ்ய ப்ரபந்³த³ம் ।
ஸெங்க³ விஸிஸ்டாத்³வைத³-ஸித்³தா⁴ந்து³
-தெ⁴ஸி தெங்க³ த³ர்ஸனஸ்ரீவைஷ்ணவம் ॥

ஹரி-க்ருஷ்ண-கோ³விந்த³-நாராயண
-ஸ்மரணுர் பொடெஸி தெங்க³ நாயகி பா⁴வம் ।
நாயகி-பா⁴வந் திஸதே கோ³பினு
-தெ⁴ரெ யொண்டே³ ப⁴க்தி-ரஸப்ரேமம் ॥

தீ³-தொ³ளா-மஹ்யார்-திஸ லலாடஸ்தானமுரு
-தெங்க³ ஹரிக்ருஷ்ண-ப்ரஸன்னம் ।
த³மர்பூ:ல்-தே-ஹேமுரு தெங்க³தேட்
-க:ளெஸி-திஸ நடன கோ³பாலம் ॥

வடப⁴த்³ர ஸாயி தெங்க³ திஸ ஸனிமு
-ஹொஸிய தே-ஹோர் பு⁴ளகாங்கி³தம் ।
வ்ருது-திஸ-தெங்க³-தெனு-தி³யாஸி தேட்
-''ஸ்வாமிநு நடன-கோ³பாலம்'' ॥

ஜகத்-உத்³தா⁴ர்ணக்-திஸ பெர்ப்பாஸி
-மார்க்³கமு தே-மாத³வராஜயோகம் ।
வில்லிபுத்தூர்-தெ⁴வ்ராந் த³ர்ஸன கர்னிம் பயெஸி
-மொன்னுமு ஆண்டாளலங்காரம் ॥

தி³ன்னுமு ஹொடந்தி³யஸி-திஸ-பி³ஸ்தரு-தே-தெங்க³
- ப⁴க்தி ப்ரவாஹம் ।
திருப்பது-கோ³விந்தா³க் ஸேவிஞ்சந்திஸ யாத்ரா-வாடுமு
-கும்போ³ண்-தேட்-திருபுவனம் ॥

தேடொண்டெ³ த³ம்பதின் திஸ'நாகுன்'-கே⁴ர்-கீஷ்டுகு
-நுகுர்-நீஹ்நா புத்ர ஸோக³ம் ।
ஸப்த:கி³ரி-தே³வ்-க்ருபாம் நுகுர்பா³ள்
-வரப்ரஸாத் தே³ய்மெனுஸி தே³வுன் ॥

ஸ்ரீநிவாஸுகு ஸேவிஞ்சிதி பி:ரியவெதேட் ஸீயாஸீ
-பெ³ட்கபோ:ள் ப:லிதம் ।
தே-த³ம்பதுல் க்ருதஞ்ஜாஞ்சலிம் சொவ்ளி-ஸவ்ல
-தே³வுனுக் பாத ஸமர்ப்பணம் ॥

[ஸொம்முனு

அங்கி[3]ஹார் கரிதிஸ தே[3]வுனு தேவேள்ரி
–தெ[4]ராஸி ஸ்திரீ-வேஷம் ।
கெராஸி தெங்க[3] நாவுரு ஸ்வாமிந் திஸ
–தேடொண்டெ[3]மொ:டமு ஸ்காபிதம் ॥
ஜலஜல்-க:ட்டி-யந்தெ[3]லு தெக[3] பாயுந்திஸ
–ப[5]ந்தி[3]லி நசந்திஸ நிருத்[3]யம் ।
ப்ரேம–ப[4]க்தி-தெ[2]ரி-தெம பிஸக ஹிண்டன்-ஹொய்
வீதினும் பரவஸம் ॥
கும்போ[3]ண்-துவரங்குறிச்சிமு ஸேனுத்ரிவைத்[3]யநாதுகு
–தி[3]யாஸி ப்ரப[3]ந்த[3]–உபதே[3]ஸம் ।
ஒநெடெ-தேட் பஜனகீ[3]துமு மடிருதெங்க[3] யவி
–பி[3]ஸெஸி க்ருஷ்ண-ப்ரதிமம் ॥
ப[4]க்தி-ப[4]வ்துலுந்திஸ-தெனுதேட் ஸித்[4]தி[3]மு
ப்ராபல்ய–ப்ரக்யாதி–ப்ரகடனம் ।
உஞ்சவிர்த்[3]தி[3] கெரி ஜிவந்தி[3]யாஸி தெனு
-லம்பு[3]ருந்–தே-ஜிவ்னம் ॥
பு[4]லகுரு 'வைகுண்டு' மெனந்திஸ வைஷ்ணவ
–தி[3]வ்யக்ஷேத்ரந்-தே-ஸ்ரீரங்க[3]ம் ।
ஏகாத[3]ஸ்- ஏகாதஸ்[3]திஸ[4] வைகுண்டம்' ஓர்ஸுன்க[3]ஜீகின்
–ப[4]ஜாஸிதேட் பாவனம் ॥
தே[3]வுனு-ஜீ-தேட்-ஸ்ரீரங்க[3] தே[3]வுகு நாயகி பா[4]வமுர்
பொடாஸி ஆக்ம நிவேத[3]னம் ।
ஹரிகு-திஸ-க[2]வி-பொுவி நசி-க:ளெ தெனுஸி
நாயகி[3].நடன–கோ[4]பாலம் ॥
நொமமு-திஸதே க[4]லாஸி-தேட் ஆச்சாருடு
ஜீயர் ஸ்வாமிநு-தே-ப்ரஸித்[3]த[8]ம் ।
கோட்தெனு உஜாஸ்யிதேட் க[3]ண்யங் கராஸிதிஸ
–மர்யாத் ஸ்வாக[3]தம் ॥
மதுரெ–வீதினும் ப[3]ணம்வெடிக்-ஸெர தெங்க[3]
-ஸெரட் ப்ரதக்ஷணந்-தே-ப[3]ண்டிம் ।
ஸிஷ்யாந்திஸ தெங்க[3] பா[4]ர்ஜெனுலு உத்ஸாஹ்வ் தெ[4]ரி
-உத்ஸவாஸீ த[3]ண்டிம் ॥
மட்ஸி-பொடி ஜெளி மத்தி ஹோந்திஸ பூ[4]தஸரீர்
-பி[3]ஸெஸி கண்டிம் ।
'ஹரி-யவ்டியோ' மெனி நரஸரீர் ஸொட்டி[3]ய-தேவேள்
-தெங்க[3] யந்தி[3]யம் ॥
ப்ரமாதீஸ-த[4]னுர்-வீஸும்–பாஞ்ச்-திஸ திதி முக்கோடி
–ஏகாத[3]ஸம் ।
மூலாதா[3]ர்அக்[2]நி செடி சொன்னிமு ஸிரஸுஞ்சாந்
–தெங்க[3] ப்[3]ரம்மானந்த[8]ம் ॥

ப்ராணா பா³னந் திஸ தெ³ஸ்யென் ஒக்சரி ப¹ராட்த¹மனூர்
-பு:ட்டெஸி தேட் கபாலம் ।
110 உஜாஸி தெம த¹னூர் கு³ருவார் தெங்க³ ஸாயுஜ்யம்யி
-த¹னூர் கு¹ருவாரம் ॥

மதுரெரி தெ³ய்டொதிஸ. ஸோயெம் ந்ருஸிம்ஹ.வெதூர்
-தெங்க¹ ஸமாதிதே காதக்கிணர் ஸ்தலம் ।
112 கோடினித்க ஜ்வடிஞ்சி காயம்க ஏஜெனுமூரு
-பொட்னு தே ஹரிஸ்மரணம் ॥

ப:லஸ்ருதி மாலா ।

வேத்-மந்து³ர் ஸாரமு உபநிஷத நவநீதமு-தி³ய
ஏ-நாயகி¹ ஸ்வாமிநு ப¹க்தி ப்ரேமம் ।
2 புன்னு-தீர்த்துமு ஹொடந்தி³ய திஸ கு³ன்னு-புஷ்பந்
-தெங்க³ ஜீவிதம் ॥

ஸனகாதி-நாரதமுனி புங்கவர்னு வரிஸிய
-ஹரிநொமமூர் தெங்க³ ப¹ஜனம் ।
4 தி³வ்ய நொமமுந் தெங்க³ ஜீபுரு பொடி-தேட்
ஸுசிருசிக ஸஞ்சாரம் ॥

ஸைவ-சித்தர் தே³வுனெனு ஸித்¹தி³ க:ளெ
-ஸதானந்த³ர்³ திஸ பூர்வம் ।
6 விஷ்ணுசித்தர்னுக ஹொய்திஸ கீஷ்டுகு பொடெ
நாயகி³- பா¹வானந்த¹ம் ॥

ஹவ்டனம்க பயெ தெங்க³ பூ:ல் பாத³ம் பொடந்திஸ
-ப¹ஜனூர் தே யமிர்தம் ।
8 பு¹லகாதந்த³ம் பெர்ப்பன்பயெ ஸர்வ ஜெனுலுக்
ஸ்வாமிநு யமிர்தவர்ஷம் ॥

ஸகல பாபுன் ப்ராயஸித்தம் ஹொயியம்கொ-தெம
-ஸிபிட்ச ஸௌக்யம் ।
10 திஸ பொடயி-தெங்க³-கோன்யீ செல்தனய்கந்
-தெம-ஏ-சரித்ரம் ॥

கு³ண்டேன் ராஜுனி ஹரிகு ப¹ஜெ ப¹க்த மொ:ட்டானெனு
திஸயம்க பரமானந்த³ம் ।
12 ஏ- மதுரை.ஸ்ரீமந் நடன கோ³பால நாயகி³-ஸ்வாமிநுகு
-ஸதா.ஜய மங்க³ளம் ॥

ஹரி ஓம்!

ஜகத்குரு ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிநு பஞ்ச ரத்ன மாலா — பொழிப்புரை

1—4 : ஸ்ரீயப் பதியான ஹரியினுடைய பாதக் கமலங்களைத் தன் நெஞ்சகத்தே வைத்துப் பாடி மகிழ்ந்தவர்! 'ஹரி ஹரி' எனக் கூவி நாணமின்றி நடனமாடி பஜித்தவர்! கொழுந்துவிட்டெறியும் கதிர்மதியம் உயர்ந்திட அதில் பேரின்பப் பெருவாழ்வு பெற்று வாழ்ந்தவர்! இத்தகு ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

5—8 : சிவபஞ்சாட்சர ஜபசித்திகள் கைவரப் பெற்றவராய் இருந்த இவர், அதில் மனநிறைவு காணாதவராகி, ஹரி பஜன வழி பாட்டு முறையில் லயித்தவர்! தீயவை மலினமான கலியுகத்தில் சுலபமாகக் கடைத்தேறுவதற்குப் பஜனை மார்க்கம் ஒன்றேயெனத் தேறி, ஹரி கீதங்களைப் பாடி மகிழ்ந்தவர்! இத்தகைய ஸ்ரீமந் நாயகி ஸ்வாமிகளை வணங்குகிறேன்!

9—12 : நெய் பெய்து எரியும் அனலென ஆசை என்னும் பாசம், 'கொள்ளக் கொள்ளக் கொணர்க' எனத் தூண்டும் தகைமை வாய்ந்தது என உணர்ந்தவர். இப் பந்த பாசச் சொந்தங்கள் மானிடப் பிறவியின் முடிவான சிறந்த பயனையடைய முடியாதபடி தடுப்பவை எனக் கண்டவர்! இத்தகு நாயகி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

13—16 : 'ஹரி'யையடையும்படியான வாழ்க்கைக் குறிக்கோள் ஏதுமின்றி, அலைபாயும் மனத்துடன் வாழ்வதிலே என்ன பயன்? அதனால் விளைகின்ற தீவினைப் பயனைத் துடைத்துத் துப்புரவாக்குவது எங்கே? உதட்டளவில் தேனெனத் தித்திக்கும் இப்புவி வாழ்க்கையின் பொய்மையின் மயக்கம் எதற்கு?' என விளக்கி வாழ்ந்துவந்த இச்சுவாமிகளை வணங்குகிறேன்.

17—20 : பிறந்திறந்து உழலச் செய்யும் பொருள் வேட்டலை விலக்கிவிட்டு, இறவாப் பெறுநிலை நல்கும் அருளினை நாடி கைவல்யம் பெற்றவர்! இப் பஞ்ச ரத்ன மாலாவை யாத்துத்தந்த தஞ்சை குண்டேன் ராஜு என்பாரின் வழிபடு தெய்வமான ஸ்ரீ ஹரியின் பாதக் கமலங்களையே நாளும் பூஜித்துப் பரிபூர்ண நிலையைப் பெற்றவர்! கயல்விழியாள் மீனாக்ஷியம்மை வதியும் மதுரையம் பதியில் சௌராஷ்ட்ர விப்ர குலத்தில் தோன்றிய இந்நடனகோபால நாயகி ஸ்வாமிகளை வணங்குகிறேன்.

ஹரி ஓம்!

மதுரை ஸ்ரீமந் நடன கோபால நாயகி ஸ்வாமிநு சரித்ர காவ்ய மாலா — பொழிப்புரை

1—2: ஹரி ஸ்மரண பரனுகவே வாழ்ந்து வந்தவரான ஸ்ரீமத் நடன கோபால நாயகி ஸ்வாமிகளின் புனிதமான சரித்திரத்தை, நாம் யாவருமிங்கே குழுமியிருந்து கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடை வோமாக!

3—4: விபூதி பஸ்மந் தரித்துச் சைவ சமய வழிபாடுகொண்டு சித்திகள் எனும் அபூர்வ சக்திகள் பல கைவரப்பெற்று வாழ்ந்தாரா யினும், அதில் தன்னிறைவு காணுதவராகித் தன் விழிப்பிலும், இருக்கையிலும், நடையிலும், உறக்கத்திலுங்கூட 'ஹரி' யையே நினைப்பவராகிக் கிருஷ்ண பக்தியில் தினைத்திருந்து 'நாயக-நாயகி' பாவனை பெற்றுய்ந்தார்!

5—6: கோடிக்கணக்கான பிறவிகளில் செய்த நல்வினைப் பயனுய் இப்பிறவியில் இவருக்கு கிருஷ்ண பக்திப்பிரேமை ஏற்பட்டு வைணவமுனியெனத் திகழ்ந்தார்!

7—8: இது வேத ரிஷிகள் வாழ்ந்து வளர்த்து வந்த பாரதப் புண்ணிய பூமி। வடக்கே வானளாவிய இமயமலை। தெற்கே கடல் கொஞ்சும் குமரி முனை। இதனிடையே பரவி விரவியுள்ள ஹரி பக்திப் பெருவெள்ளம்।

9—10: ஆங்கேயொரு பாண்டிய நாடு என்னும் தேனெனத் தித்திக்கும் தமிழ் வழங்கும் மண்டலம்। அதில் கலையழகு படைத்த மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்த மதுரை என்னும் மதுரமான கூடல் நகரம்।

11—12: அந்நகரில் வாழ்ந்துவந்த சுந்தரச் சௌராஷ்ட்ர விப்ர குலத்தில் 'நன்கொண்டான்' எனப் பெயர் பெற்றதோர் உயர்குல குடும்பம்।

13—14: 'ஜாபாலி' கோத்ரங் கொண்ட இக்குடும்பத்திற்குக் 'கொப்பான்' என்ற பெயரும் உண்டு! இவருடைய தாயார் லக்ஷ்மி பெய்। தந்தையாரோ ரெங்கய்யான்।

15-16: நெய்யுந் தொழிலைத் தன் வாழ்க்கை நலனுகக் கொண்டவர்கள்। சோபக்ருது வருடம், மார்கழி மாதம், சதுர்த்தசி திதி கூடிய நன்னுள். (9.1.1843)

17—18 : வியாழக்கிழமை, இருபத்தியிரண்டாம் நாள், மிருக சீர்ஷ நட்சத்திரம் — இவை யாவும் ஒருங்கேயமையப் பெற்ற நன்னாளில், வானவெளியில் நடமாடும் ஒளிநட்சத்திரம் ஒன்று இப் புவியிலிறங்கிப் பிறவி எடுத்தது। இவரே நம் நாயகி ஸ்வாமிகள்।.

19—20 : தன் பெற்றோருக்கு ஐந்தாவது மகவாகப் பிறந்த இவருக்கு 'ராமபத்ரன்' என்று ஜாதகர்மாவில் பெயரிடப்பட்டது.

21—22 : தன் இளம் பிராயத்தில், கல்வி கேள்விகளிலும், விளையாட்டுக்களிலும் எவ்வித முனைப்போ, முயற்சியோயின்றி மெத்தெனயிருந்த யிவரை, இவரது பெற்றோர்கள் முணுமுணுத்துக் கடிந்துரைக்கலாயினர்.

23—24 : நெய்யுந் தொழிலும், கணக்கர் தொழிலிலும் இவரை ஈடுபடுத்தப் பெரிதும் முயன்ற இவரது தாய் தந்தையர் தோல்வியையே கண்டனர்। இயல்பாகவே தனித்திருப்பதில் ஆர்வங்காட்டிய இவர் அமைதியான தனி இடங்களையே நாடிச் சென்றார்।.

25 – 26 : பின்னல் இவர் சைவ சித்தராகி, வைணவராக மாறி, க்ருஷ்ண பக்தியில் திளைத்து, ப்ரமே ரஸத்தில் மகிழ்ந்து, நாயக-நாயகி பாவனையில் நடனமாடி இறைவனுடன் இரண்டறக் கலந்துவிடுவார் என்று அப்போது யாருக்குத் தெரியும்?

27—28 : இவரது ஜாதக ராசியில் லக்ன பாவத்தின் இரண்டாமிடத்தில், போக சுக்ரனும், புத்தி புதனும் சேர்ந்து கோணச் சனியுடன் கூடியிருந்தனர்। சூர்ய சந்திரர்கள் முறையே ராகு, கேதுக்களுடன் கூடி, எதிரெதிராக ஸமஸப்தமமா யமர்ந்தனர்।.

29—30 : இத்தகைய கிரகயமைப்புகளைக் கொண்ட இவரது வாழ்க்கை, சந்யாஸ யோகத்தையே வழங்கியது।. ஒரு நாள் களைப்புத் தீர ஒரு வீட்டுத் திண்ணையிலயர்ந்திருக்கையில், 'ஞான யந்தாதி' என்றொரு நூல் இவருக்கு எவ்வாறோ கிடைத்தது।.

31—32 : அதன் விளைவாக இவர், கள்ளிப் பாலையும், எட்டிக் காயையும் வகைப்படுத்தி உணவாகக் கொண்டு, திருப்பரங் குன்றத்துக் குகையொன்றில் பத்தாண்டு காலம் தவமியற்றிப் பிரம்மச்சரிய விரதத்தைக் காத்து நின்றார்।

33—34 : 'சட்டி ஸ்வாமிகள்' என்ற துறவியொருவர்மூலம் இச்செய்தியினைக் கேள்வியுற்ற இவரது தாயார், தன் மகனைத் திரும்பவும் வீட்டிற்கு அழைத்துவர எண்ணி இவரது இருப்பிடம் ஏகி, திருமணஞ் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையை மேற் கொள்ளும்படி இவரைப் பெரிதும் மன்றாடினர்கள்.

35—36 : ஆனால் இவரோ, 'ஒரு சமயம் கொள்ளை நோயில் உடன்பிறந்த இரு பெண்கள் மறித்தனரே, தான் மட்டும் தப்பிப் பிழைத்தேனே, மானிடப் பிறவியின் இறுதி லட்சியப்பயனடையவே காப்பாற்றப்பட்டேன் போலும்' என்று கூறித் தன்னைத் தியாகஞ் செய்துவிடுமாறு பெரிதும் வேண்டி நின்றார். உலக மக்கள் உய்யு மொரு வழியினைப்பற்றும் துறவியாகவேத் தன்னையாக்கிக் கொள்ளத் தன் தாயாரிடம் அனுமதியும் பெற்றுவிட்டார்.

37—38 : தன் தாய் தன் கையினுலேயே பிக்ஷா பாத்திரம் ஒன்றை இவருக்கு வழங்க, அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். குரு என்று ஒருவரை நாடி, தீக்ஷை பெற்றுலன்றி எத்தவமும் முழுமைபெற்று முதிர்ச்சி பெறுவதில்லையன்றே.

39—40 : எனவே, குருநாதர் ஒருவரை நாடிவந்த இவர், பரமக்குடி பருத்தியூரப்பன் கோயிலிலிருந்து வந்த இராமலிங்கயடிக ளாரின் சிஷ்யர் நாகலிங்கயடிகளாரைச் சரணடைந்து குருவாக ஏற்றார்.

41—42 : இவர் விபூதி பஸ்ம தாரணராய் சிவபஞ்சாட்சர ஜப த்யான பரராகி சிவராஜயோகத்தில் சித்திபெற்று, பன்னிரெண்டு முழ உயரத்தில் பறக்கும் அபூர்வ சக்தியையும் பெற்றுவிட்டார். இம் மகிமையைக் கண்ட நாகலிங்கயடிகளார், நாயகி ஸ்வாமிகளின் பெற்றோர் விழைந்த விருப்பத்தினைச் செயலாற்றிய இவரது இந்த அற்புத நிலையைக் கண்டு உளம்பூரித்து நின்றார்!

43—44 : அது முதலாக இவர் 'சதானந்தச் சித்தர்' என நாகலிங்கயடிகளாரால் அழைக்கப்பட்டு அப்பெயரே எங்கும் வழங்க லாயிற்று. 'க்ருதமால்' என்னும் நதிக்கரையில் அமைக்கப்பட்ட இவர்தம் பெற்றோர் சமாதிக்குத் தன்னுயுள் வரை புஷ்பாஞ்சலி செலுத்தி வந்தார்.

45—46 : இவரது அருமை பெருமையினைக் கேள்வியுற்ற இராமநாதபுரத்து மன்னன் சேதுபதி என்பான், இவரை வரவேற்று நன்குயுபசரித்தான். மேலும் ஸ்வாமிகள் பன்னிரெண்டு ஆண்டு காலம் மௌன விரதம் பூண்டு தன் தவ வலிமையைப் பெருக்கிக் கொண்டார்.

47—48: அண்டவெளியில் பரவிநிற்கும் பரமாணுசக்தியுடன், பிண்டமெனும் ஒவ்வொருவர் உடலிலும் அடங்கியுள்ள ஜீவ அணுக்கள் முறையோடு உறவாடப்பட்டு நாளும் வளர்ந்து வளப்பம் பெற்றுப் பெருகும்பொழுது, 'ஓஜஸ்' என்னும் ஒளி உடலெல்லாம்

பரவி 'பிரம்ம தேஜஸ்' என்னும் பொலிவை முகத்திலேத் தேக்கித் தருகின்றன! இத்தகைய 'திவ்ய தேஜஸ்' தன்முக மண்டலத்தில் மிளிர வாழ்ந்தார் நம் நாயகி ஸ்வாமிகள்!

49—50: இத்தகைய இவரது வாழ்க்கை எனும் வண்ண மலர் மலர்ந்து சுகந்தமான புகழ் மணம் பரப்பிக் கொண்டிருந்தது! தன் பிறந்தகமான மதுரைக்குத் தன் குருநாதரின் கட்டளைக் கிணங்கத் திரும்பி வரலானார்.

51—52: அங்ஙனம் இவர் திரும்பி வருங்கால், வழியில் சிவகங்கை ஸமஸ்தான மன்னனை கௌரி வல்லபத்தேவன் என்னுமோர் சிற்றரசன், இச்சுவாமிகளின் உண்மை நிலையினை யறிய எண்ணங்கொண்டு, இவரைப் பலவித சோதனைகளுக்கு உள்ளாக்கினன்!

53—54: கடலலை யென மிதந்த சுருண்ட கேசக் கற்றைகள்!

55—56: கார் வண்டின் வனப்பை யொத்தக் கறுமையான கூந்தலின் செழுமை! வளமாக பின்னப்பட்ட பின்னலிலே பொருத்தப்பட்ட பிச்சிகளின் நவரத்ன வர்ண ஜாலங்கள்! வில்லையொத்த வளைந்த புருவங்களின் ஒயில்! கறுமை தீட்டிய விழிகளைக் கொண்ட மீன் யொத்த நயனங்கள்! மதுரமான சிருங்காரக் களி மொழியின் லாவகம்! எழுமிச்சைக் கனியன்ன வனப்பு! இவையாவும் ஒருங்கே பெற்ற நாட்டியக் கணிகை ஒருத்தியைத் தனிமையில் இவர்பால் அனுப்பிவைத்து, அந்த இடத்தையும் நன்கு பூட்டி விட்டான் சிவகங்கை மன்னன்!

57—58. ஆனால், ஐம்புலன்களையும் அடக்கிய ஜிதேந்திரியரான இம்மகானின் தூய்மையான உள்ளத்தில், கடுகளவுகூட காம வேகம் பாயவில்லை! சித்திகள் பல கைவரப் பெற்றவரான இவர், எளிதாகச் சூட்சம உருக்கொண்டு அப்பூட்டிய யறையை விட்டு வெளியேறினர்! பிறிதொரு நாள், நாற்பத்தைந்து நாட்கள் கொண்டதொரு மண்டல காலம் வரை பூமிக்கடியில் புதைக்கச் செய்து, தன் யோக மகிமையால் உயிருடனிருந்து காட்டினர்!

59—60: இவரது அற்புத சக்திகளைப் பலவாறு கண்ட அம்மன்னன், இவரடி பணிந்து இவரது சிஷ்யனாக வாழ்ந்து வரலானான்! ஒரு சமயம் இவர், இவ்வரசனின் பணியாளரால் புதைக்கப்பட்டு மூடப்பட்டிருந்தபோது, மேல் தளத்தின்மீது வெடிப்புக்காண வெளியேறி மாயமாகி, மதுரை நகரிலுள்ள 'விடிஞ்தோப்' என்ற தோட்டத்தில் பிரவேசித்துக் கண்ணயர உறங்கிய போது, இவர் தலைமீது நாகஸர்ப்பம் ஒன்று படம் விரித்துக் குடையாக நிழல் தந்தது!

61—62 : இவர் சித்திகள் சில பெற்று சித்தைகள் பல புரிந்து வந்தாரெனினும், இவருக்கு அவை மனநிறைவை யளிக்கவில்லை |

63—64 : வாஞ்சிதமான முற்பிறவியின் நல்வினைப் பயனாக விளைந்த வாசனையால், இவருக்குக் 'கிருஷ்ணபக்தி' என்னும் ப்ரேமபக்தியில் பற்று ஏற்படலாயிற்று |

65—66 : இதன் காரணமாக, திருகுருகூர் வடபத்ர ஆர்யர் என்ற வைணவப் பெரியாரை நாடி, ஆழ்வார் திருநகரி என்ற ஊரை நோக்கிப் புறப்பட்டார் | வழியில் சாத்தூர் என்ற சிற்றூரில் கள்ளர் களால் வழிப்பறிக்கு ஆளானார் | அவர்களை வெகுண்டு பார்வை யிழக்கச் சாபமிட்டுக் கண்களைப் பறித்தார் |

67—68 : ஆனால், அக்கள்வர்கள் அவரிடம் மன்னிப்புக் கோரி சரணடையவே, கருணைகொண்டு மீண்டும் அவர்களுக்குப் பார்வையை யருளினார் |

69—70 : காலப்போக்கில் இத்தகைய அற்புத சித்து விளை யாட்டுக்கள், நித்யானந்தப் பெருவாழ்வை யடைய வெரட்டாமல் தடை செய்பவை என உணர்ந்து கொண்டார் |

71—72: வடபத்ர ஆர்யர் என்ற ஆச்சாரியர் திருநகரியில் இவரை வைணவ விதிப்படி, ஸமாச்ரயண முத்ரா தாரணாதி பஞ்ச ஸம்ஸ்காரங்களால் வைணவராக மாற்றி, அஷ்டாக்ஷர மஹா மந்த்ரோ பதேசமும் செய்தார் | ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே முழுமுதற் கடவுள் என ஐயமறத் தெளிவதான தொரு ஞான விகாசம் பெற்ற வராகி விளிர்ந்தார் |

73—74 : த்வையம், சரமஸ்லோகம், திவ்யப்ரபந்தம் ஆகிய வைகளின் தாத்பர்யங்களையும், விசிஷ்டாத்வைதம், பரந்யாஸ பத்ததி ஆகியவைகளின் உட்பொருளையும் கசடறக் கற்றுத் தேர்ந்த வைஷ்ணவச் செம்மலானார் |

75—76 : பக்தி மார்க்கத்தில் பெரிதும் போற்றப்படும் நாயக-நாயகி பாவனையிலாழ்ந்து விட்ட இவர், கோபியரின் ப்ரேமபக்தி எனும் அநுராகம் மிகுந்தவராய், 'ஹரிக்ருஷ்ண-கோவிந்த-நாராயண' என்னும் 'நாம ரஸனை'யில் ரஸித்து வாழ்ந்து வரும் சீலரானார் |

77—78 : இரு கண்களுக்குமிடையேயுள்ள லலாட ஸ்தான மென்னும் புருவ மத்தியில், கண்ணன் தன் கழலினைக் காணும் பேற்றினைப் பெற்றுப் பேருவகை யெய்தினார் | காமனை முகிழ்த்த மனமதில் களிநடம் புரியும் கார் வண்ணக் கண்ணனைக் கண்ட அவர், அவருடன் தானும் ஆடிப்பாடி ஆனந்தக் கூத்தாடினார் |

79—80 : இக்காட்சியையும், இவரது மகோன்னத நிலையினையும் கண்ட வடபத்ர ஆர்யர், இவரை 'நடன கோபாலர்' என அழைத்து மகிழ்ந்தார்.

81—82 : உலகம் உய்ய 'மாதவராஜயோகம்' என்னும் வைணவ மார்க்கத்தைப் பரப்பி, ஹரிபக்தியைப் பெருக்கி வரலானார். ஸ்ரீவில்லிபுத்தூர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரைச் சேவித்த பிரபாவத்தால, இவருக்கு 'நாயக-நாயகி' பாவனை பற்றிக் கொண்டது.

83—84 : திருவேங்கடவனைக் சேவிக்கத் திருப்பதிக்கு ஏகுங் கால், வழியில் குடந்தையை யடுத்துத் திருபுவனம் என்ற சிற்றூரில், 'நாகன்' என்ற வீட்டுப் பெயர் கொண்ட கிருஷ்ணன் என்பவர், தனக்குப் புத்ரபாக்யமில்லாமல் சோகித்திருப்பதைக் கண்டார்.

85—86 : ஏழுமலையானின் திருவருளால் அவருக்குப் புத்ர பாக்யம் ஏற்படுமென வாக்குறுதியளித்தவாறே, திருப்பதி யாத்திரையை முடித்துக்கொண்டுத் திரும்பவும் அவரைச் சந்தித்த பொழுது, அக்கிருஷ்ணன் தம்பதிகளுக்கு ஆண் குழந்தை யொன்று யருளப்பட்டிருப்பதைக் கண்டார்.

87—88 : அத்தம்பதிகள் தங்கள் நன்றியைச் செலுத்தத் தன்பாலிருந்த புடவை, ரவிக்கை, பொன்னுபரணங்கள் ஆகிய வற்றை ஸ்வாமிகளுக்கு அர்ப்பணம் செய்தனர்.

89—90: மனமுவந்து அவற்றை ஏற்றுக்கொண்ட ஸ்வாமிகள், அன்று முதல் அவைகளைப் பூண்டு ஸ்திரீ வேஷத்திலேயே விளங்கி வரலானார். அங்கே ஸ்வாமிகள் தன் பெயரில் மடம் ஒன்றை நிறுவ திருவுளம் பற்றி அவ்வாறே செய்தார்.

91—92 : அங்கே, தன் கால்களிலே ஜல்ஜல் என்று ஒலிக்கும் சலங்கைகளைக் கட்டிக் கொண்டுப் பேருவகைக் களிப்பில் களிநடம் புரியும் ஸ்வாமிகளின் நிருத்யக் காட்சி. ப்ரேம பக்தி என்னும் போதையேறி தன்னை மறந்து வீதிகளிலே ஆடிப் பாடிக் களித்துக் கூத்தாடி வந்த அவர்தம் பித்தமெனும் சித்த நிலை.

93—94 : குடந்தை துவரங்குறிச்சியில் 'வைத்யநாதன்' என்பவர் இல்லத்தில் தங்கி, திவ்யப்ரபந்த உபதேச மளித்தருளி வந்தார். ஒருநாள் அங்கு நடந்த 'ஹரி' பஜனையில், அங்கே வைக்கப்பட்டிருந்த கிருஷ்ண ப்ரதிமை யொன்று, ஸ்வாமிகளின் மடிமீது ஏறி அமர்ந்து வியப்பிலாழ்த்தியது.

95—96 : இவ்வரிய நிகழ்ச்சி ஊரெல்லாம் பரவி இக்கிருஷ்ண பக்தனின் பெருமையினைப் பெரிதும் நிலைநாட்டத் தொடங்கியது। 'உஞ்சவிருத்தி' செய்தே தன் வாழ்க்கைப் பூராவும் ஸஜ்ஜிவனஞ் செய்து வந்தார்।

97—98 : 'பூலோக வைகுண்டம்' என போற்றப்படும் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திற்கு, ஆண்டு தோறும் வரும் வைகுண்ட ஏகாதசி யன்று சென்றுப் பாம்பணைப் பள்ளி கொண்டத் திருவரங் கனைப் பாடி பஜித்து வந்தார்।

99—100 : நாயக-நாயகி பாவனையில் அரங்கனைக் காதலித்த இவர், ப்ரேம ரஸனையில் மெய்மறந்து ஆடிப்பாடி லஜ்ஜைச் சிறிது மின்றி ஆனந்தக்கூத்தாடி ஆத்ம நிவேதனம் செய்து வந்தார்।

191—102: இவ்வநுபூதி நிலையைக் கண்ட ஸ்ரீரங்கம் ஜீயர் ஸ்வாமிகள் மயிர்க்கூச்செரிந்து இவரை, 'நடன கோபால நாயகி ஸ்வாமிகள்' என அழைத்து யருள் பாலிக்கவே, அதுமுதல், 'நாயகி ஸ்வாமிகள்' என்ற பெயரே இவருக்கு நிலைத்து நிற்க லாயிற்று।

103—104 : மதுரை வாழ் மக்கள் இவரை, ராஜ வீதிகளிலே குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியொன்றில் வாண வேடிக்கை களுடன் மங்கள வாத்யங்கள் முழங்க நகர் வலம் வரச் செய்து சிறப் பித்தனர்। இவரது சிஷ்யர்கள் பன்னிருவர் இவரைப் பல்லக்கு ஒன்றிலமர்த்திச் சுமந்து கொண்டு வீதிவழிகளிலேச் சென்றனர்।

105—196: நைந்து எறிந்து மண்ணுகி விடும் தன்மையதான ஸ்வாமிகளின் பஞ்சபூத சரீரம், சமாதிக் குழியிலே யமர்ந்துவிட்டது। ஹரி வந்து விட்டார் என்னும் பொருளில் 'ஹரி அவ்டியோ' என விளித்தார் தன் முடிவு காலத்தில்। (8.1.1914)

107—108 : மூலாதாரத் தணல் மற்ற ஆதாரச் சக்கரங்களி னூடே யூடுருவிச் சென்று, சகஸ்ரார மண்டலக் கபாலத்தில் முட்ட, எல்லையற்றப் போன்ப மதுகரத்தைச் சுவைத்தார்।

109—110 : தன் சரீரத்தை இயக்கிக் கொண்டிருந்த ப்ராண யபான முதலிய உயிர் காற்றுக்கள் ஒன்றிணைய, ஸ்வாமிகள் தன் கபாலத் துவாரத்தின் வழியாகத் துரிதமாக வெளியேறிப் பரவாசு தேவனின் ஸாயுஜ்யத்தில் லயித்தார்। வியாழக்கிழமையில் ஜனித்த ஸ்வாமிகள் வியாழனன்றே 'ஸாயுஜ்யம்' பெற்றார்।

111—112 : அந்தப் புனித ஸ்தலமே மதுரையினின்றும் ஆறு கல் தொலைவிலுள்ள 'காதக்கிணர்' என்ற இடத்தில் எழுந்தருளியுள்ள' நிருஸிம்ஹப் பெருமாள் திருக்கோயிலுக்கு எதிராக யமைக்கப்பெற்றப் பாவனமான ஸ்வாமிகளின் புண்ணிய க்ஷேத்ரம்! 'ஹரி ஹரி' என நினைந்துருகாமல், வரம்பிலா வேட்கையில் கோடிக்கணக்கானச் செல்வங்களை ஈட்டித்தான் என்ன பயன் ?

—:o:—

பல ஸ்ருதி மாலா — பொழிப்புரை

1—2 : இந்நாயகி ஸ்வாமிகள், வேதங்கள் விளக்கிய விழுப் பொருளையடைய எளியதான தொரு வழியென நின்றப் பிரேம பக்தியையேப் பின்பற்றி நின்றவர்! இவரது வாழ் நாட்கள் யாவுமே, ஹரி பக்திப் பாவனமான புண்ய தீர்த்தம் நிறைந்த புஷ்கரணியில் முகிழ்த்த அன்றலர்ந்த புஷ்பங்கள்!

3—4 : ஸனகாதி நாரத முனிவர்கள் அள்ளியள்ளி யருந்திய ஹரி நாம யமிர்தம் எதுவோ, அதுவ இவருடைய ஹரி பஜனம்! ஹரி நாம திவ்ய பஜனும்ருத ருசி, இவரது நாக்கிலே தவழ்ந்து கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தது!

5—6: சைவ சித்தராகச் 'சதானந்த சித்தர்' என பெயரிடப் பட்டு விளங்கி அற்புத விநோதங்களில் விளையாடத் தொடங்கிய இவர், 'விஷ்ணு சித்தர்' என்னும் வைணவராக்கப்பட்டு, 'நாயக-நாயகி' பாவனையின் ப்ரேமபக்தி ரஸத்தில் தோய்ந்தவராய், 'க்ருஷ்ண ப்ரம்ம' மாய் மாறி விட்டவர்!

7—8 : இத்தகு மகிமை பெற்ற அன்னருடைய மலர்ப் பாதங்களை நாம் பஜித்துப் போற்றிப் பணிவோமாக! அவர் தம் திருவாய் மலர்ந்தருளிய யமிர்தமான யருளிச் செயல்கள் உலகமெலாம் உய்ய விரிந்து பரவட்டும்!

9—10 : இச் சரித்திரத்தைப் படிப்போரும் கேட்போரும் செய்த தீவினைப் பயன்கள் யாவும் நசிக்கப் பெற்றுப் புனிதராகி எல்லா வகையிலும் வளமுடன் வாழ்வர் என்பது திண்ணம்!

11—12 : இச் சரித்திரத்தைச் காவிய வடிவமைத்துத் தந்த குண்டேன் ராஜு என்பாரின் இதயத்திலுறையும் ஸ்ரீ ஹரியைப் பஜித்தப் பெம்மான் நம்நாயகி ஸ்வாமிகள்! இவரை நினைக்குந் தோறும் நினைக்குந்தோறும் உள்ளம் நிறைவது தெவிட்டாப் பேரின்பமே! அழியாப் பிறவியான இம்மதுரை மஹநீயர் ஸ்ரீமந் நடனகோபாலநாயகி ஸ்வாமிகளுக்கு என்றும் 'ஜயமங்களம்' பாடி மகிழ்ந்து, அவர்தம் திருவருள் பெற்று உய்வோமாக!

—o—

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	1 & 5	ஸொடி	ஸொடி^{3}
1	3	ஸொடி	ஹொடி^{3}
1	16	கக^{3}	கக
1	4,8,12,16 & 20	நாயகி^{3}ஐ	நாயகிஐ
1	11	ஸொடை	ஸொடை^{3}
2	11	ஸந்த^{3}ரக	ஸுந்த^{3}ரம்
2	12	நன்கொண்டான்	நன்:கொண்டான்
3	15	தி^{3}ர்ப்பள்	து^{3}ர்ப்பள்
3	16	மொ:டொ	மஃடொ
3	26	ப்^{3}ரம்மம்	ப்^{3}ரஹ்மம்
3	27	ஸப்த^{3}மம்	ஸப்தஃமம்
3	28	பு^{3}த^{3}ன்	பு^{4}த^{4}ன்
4	34	கி^{3}ருகஸ்தன்க	க்^{3}ருஹஸ்தன்க
4	36	த்^{3}யஜம்	த்யஜம்
4 & 6	42 & 79	புளகாங்கி^{3}தம்	புளகாங்கிதம்
4 & 8	44 &111	ஸமாதி	ஸமாதி^{4}
4	46	வ்ரத^{3}ம்	வ்ரதம்
4	46	த்^{3}யாந்	த்^{4}யாந்
4	48	முகா^{3}ரவிந்த^{3}ம்	முகா:ரவிந்த^{3}த^{4}ம்
5	63	ப்ராராப்தம்	ப்ரா ரப^{3}த^{4}ம்
5	64	ப^{3}க்தி	ப^{4}க்தி
5 & 6	65 & 79	வடப^{4}த்^{3}ர	வடபத்ர
6	74	எபித்^{3}தா^{3}ந்து^{3}	ஸத்^{3}தா^{3}ந்து
6	79	ஹொஎய	ஹொயஎ
6	85	ஸோக^{3}ம்	ஸோகம்
6	87	ஸியாஸி	எியாஸி
7	91	ந்ருத்^{3}யம்	ந்ருத்யம்
7	96	வித்^{3}தி^{3}	வ்ருத்தி
7	101	ப்ரஸித்த^{3}ம்	ப்ரஸித்^{3}த^{4}ம்
7	104	194	104
7	104	பா^{4}ர்ஜெஜுஜு	பா^{3}ர் ஜெஜுஜு
7	105	கண்டிம்	க:ண்டி^{3}ம்
7	106	யந்தி^{3}யம்	யந்தியம்
7	108	ப்^{3}ரம்மானந்த^{3}ம்	ப்^{3}ரஹ்மானந்த^{3}ம்
8	8	பு^{4}லகாதந்த^{3}ம்	பு^{4}லகாதத்தம்
8	1, 6 & 12	நாயகி^{3}	நாயகி

ஹரி ஓம்!

நீங்களும் தெய்வீக இன்பம் பெற்றிடுவீர்!

ஓர் அநுபவ உரை

மனம் ஒன்றிய பக்தி சிரத்தையுடன் கீழ்காணும் விதிமுறைப் படி பூஜை செய்து! அபூர்வ தெய்வீக அநுபவங்களைப் பெற்றிடுவீர்!

ஏதேனும் ஒரு வளர்பிறை பஞ்சமிதிதியில், காலை $4\frac{1}{2}$—6, மாலை 6—$7\frac{1}{2}$, நடு நிசி இரவு $11\frac{1}{2}$—1 மணி ஆகிய நேரங்கள் ஒன்றில் ஆரம்பித்து பௌர்ணமியில் முடிக்கவும். பூஜா ஸ்தலத்தை பசுஞ்சாணத்தால் மெழுகிச் சுத்தஞ்செய்து, கோலமிட்டு அதன் மீது ஒரு மரப்பலகையை வைத்து, அதன் மீது தாமரை வடிவில் கோலம் வரைந்து அதன் நடுவில் ஒரு தாமிரம் அல்லது வெள்ளி தாம்பாளத்தில் ஒரு லிட்டர் நெல் அல்லது பச்சையரிசி பெய்து, அதற்கு நடுவில் வெள்ளி அல்லது பித்தளை பஞ்சமுக குத்துவிளக்கு அமர்த்தவும்.

அதில் புத்துருக்கு நெய் அல்லது சுத்தமான நல்லெண்ணெய் விட்டுப் புதிய பஞ்சு இழைத்திரிகள் ஐந்தை ஐந்து முகங்களிலும் சுடராக ஏற்றி, சந்தன குங்கும திலகமிட்டு, நறுமண மலர் மாலை சாற்றி, வாசமிகு ஊதுவத்தியைக் கொளுத்தி, தசாங்க தூப தீபங் காட்டி, கற்கண்டு, பாயாசம், சர்க்கரான்னம் இவைகளில் ஏதேனும் ஒன்றை நிவேதனஞ் செய்து பச்சைகற்பூரம், ஏலக்காய் சேர்ந்த பாக்குடன் கூடிய தாம்பூல, உபசாரம் செய்து, கட்டிச்சூடம் ஏற்றி, தீபத்திற்கும் அருகில் வைக்கப்பட்டிருக்கும் ஸ்வாமிகளின் திருவுருவப் படத்திற்கும் ஜெயமங்களஞ் சொல்லி ஆராதிக்கவும்.

உடனே ஸ்வாமிகளை ஸ்மரித்த வாறே, மதுரை ஜகத்குரு ஸ்ரீமந் நடனகோபால நாயகி ஸ்வாமிநு குரு ஸ்துதி, பஞ்ச ரத்ன மாலா, சரித்ர காவ்ய மாலா, பலஸ்ருதி ஆகியவைகளைத் தத்தமக்குத் தெரிந்த ஸுஸ்வரங்களிலோ, விருத்தத்திலோ, கீதா ராகங்களிலோ ஏதேனும் ஒன்றில், பிழையின்றி நிதானமாய்ப் பாராயணம் செய்யவும்.

பிறகு கீழேயுள்ள எட்டடி கொண்ட கீதத்தை, 108,54,27 என்ற ஏதேனும் ஒரு கணக்கில் ஏகாக்ர சித்தத்துடன் தொடர்ச்சி யாக பஜித்து, முடிவில் கட்டி கற்பூர தீபம் காட்டிமுடித்து, கையில் சிறிது புஷ்பம் எடுத்து ஸ்வாமிகளின் பாதத்தில் அஞ்சலிசெய்யவும்.

ஆரம்பத்திலேயே, அருகில் ஒரு கிண்ணத்தில் தீர்த்தம் எடுத்து வைத்துக்கொண்டு பூஜையின் தொடக்கத்திலும் முடிவிலும், அச்சுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம: என்று மும்முறை ஆசமனஞ் செய்து, ஹரே கிருஷ்ணய நம: என்று ஒரு முறை கீழே தீர்த்தம் விடவும். பூஜாயாரம்பத்தில் ஸ்வாமிகளை தீபத்தில் ஆவாஹனம் செய்து முடிவில் உபஸ்தானஞ் செய்யவும். இது மிகவும் முக்கியம் பழிக்கவேண்டிய கீதம்.

'ஜெய் ஜெய் ஹரிஹரி ஜெய் ஜெய் கோ³விந்தா³ ।
ஜெய் ஜெய் ஹரிஹரி ஜெய் ஜெய் கோ³விந்தா³ ॥
ஜல்ஜல் அந்தெலு ப⁴ந்திலி நசினிந் திஸதே கோ³விந்தா³ ॥
ஸுஸ்வர ஸப்³து³மு மதுரகீ³துமு ஹரிதே கோ³விந்தா³ ॥
ஹாதுமு கொலண்ணெ தெ⁴ரிதே—கேட்
—கள்ளிமு கோ³விந்தா³ ।
தி³வ பொ⁴ரெ தி³வாமு மஹ்யார்—தே
—ஹரிக்ருஷ்ண கோ³விந்தா³ ॥
பொ⁴ரியவெ ஸிரு ஸெங்க மொன்னுமு—தே
—கோ³விந்தா³ ।
தி³யதிஸ யானந்த³ம்—தே குண்டேன்ராஜுனி
—ஹரி கோ³விந்தா³ ॥
— (ஹரிகீதம்—4585)

இக்கீதத்தின் பொழிப்புரையை யறிந்து கொள்ளுதல் இன்றி யமையாததாகும்!

'ஜல் ஜல்' என ஒலிக்கும் சலங்கைகளைக் கட்டிக்கொண்டு கூத்தாடுங் களிப்பிலே அந்த கோவிந்தன்! மங்களகரமான ஸ்வர ஸப்தங்கொண்ட இன்னிசை இனிமையில் அந்த கோவிந்தன்! கோல்களைக் கையிலேந்தி விளையாடும் கோலாட்டக் களிப்பிலே அந்த கோவிந்தன்! சுடரொளி படர்ந்த தீபத்தின் திவ்ய ஒளி நடுவில் அந்த ஹரிகிருஷ்ண கோவிந்தன்! உடலெலாம் புல்லரிக்க மனத்திலே நிறைந்து நிற்கும் அந்த கோவிந்தன்! இத்தகைய ஆனந்தப் பேருவகைதரும் குண்டேன் ராஜு என்பாரின் உள்ளுறையும் ஹரிகோவிந்தன்! ஸகல ஜெயத்தையும் நமக்கு கொடுத்தருள்வானுக!

குறிப்பு: பூஜா தினங்களில் வீட்டு விலக்கு முதலான தீட்டுகள் படாமல் காக்கவும். மதுமாமிச லாகிரி பழக்கமுடையவர்கள் மேற்படி தினங்களில் அறவே விலக்கவும். ஸ்திரீ ஸ்பர்சம்;க்ஷவரம், வபநம், எண்ணெய் ஸ்நானம் கூடாது. கைகால்களை சுத்திகரித்

துக் கொண்ட பின்னரே பூஜைக்குச் செல்லவேண்டும். கறுப்பு கரை வேஷ்டி, கைலி, உபயோகித்த வஸ்திரம், ஒற்றை வஸ்திரம் இவைகளைத் தவிர்க்கவும். ஸ்நான பானுதி, நெற்றித் திலகம் இவைகளின்றி இருக்கக்கூடாது. எவர் சில்வர் சாமான்கள், காஸ் அடுப்பு இவைகளை பூஜையின் நிமித்தம் உபயோகிக்காமலிருக் கவும் வாசமற்ற புஷ்பங்களை விலக்கவும். கச்சம், பூநூல், புண்ட்ரம் சந்தி ஜபம் முதலான அநுஷ்டானங்களுடையவர்கள் அவைகளைப் பற்றிக் கொண்டே பூஜை செய்யவும்.

எக்காரணத்திலேனும் இடையில் பூஜை தடைப்பட்டால், மறுபடியும் புதிதாக தொடங்கி தொடர்ந்து முடிக்கவும். இதில் குறிப்பிட்ட காலகெடுவிற்குள் உங்களுக்குத் தெய்வீக அனுபவங்கள் ஏற்படவில்லையானால், தொடர்ந்து 49 நாட்கள் கொண்ட மண்டல காலம்வரை மனஒருமை கொண்டு முறைப்படி செய்ய, பயன் நிச்சயம் வழங்கப் படுவதைக் காண்பீர்கள்!

இதன்படி கடைப்பிடித்துப் பயனடைந்தவர்கள், தயவுசெய்து கீழே காணும் முகவரிக்குத் தெரிவித்துத் தொடர்பு கொள்ளக் கோருகிறேன்.

முகவரி: 'ஸித்த ஹரி கீதானந்தர்'

K. H. ராஜாராம்,
44, கிருஷ்ணன் கோவில் 3-ம்தெரு,
மானம்புச்சாவடி, தஞ்சாவூர்—613001.
(தமிழ்நாடு)

ஹரிஓம் தத்ஸத்!

பிழை திருத்தம்—10-ம் பக்கத் தொடர்ச்சி

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
மங்களா சாஸனம்	4	கீதானத்தர்	கீதானந்தர்
ஷை	5	இப்பொது	இப்பொழுது
குரு ஸ்துதி	1	பாப்^{3}	பா^{3}ப்
ஷை	5	யோக^{4}எித்^{4}தின்^{3}	யோக^{3}எித்^{3}தி^{4}ன்
பதிப்புரை	19	உந்துதலால்	உந்துதல்
பொழிப்புரை பக்கம் 1	17—20-ல் வரி 8	நயாகி	நாயகி
முகவுரை	பாரா—3 கடைவரி	வருதை	வருவதை
பக்கம் 2	7—8-ல் வரி 2	வானனாவிய	வானளாவிய
பக்கம் 7	85—86.ல்	சத்தித்த	சந்தித்த
பக்கம் 8	95—96:ல் வரி 4	செய்நு	செய்து
	109—110-ல் வரி 2	உயிர் காற்றுக்கள்	உயிர்க் காற்றுகள்
பலஸ்ருதி பொழிப்புரை பக்கம் 9	3—4-ல் வரி 2	அதுவ	அதுவே

மதுரை கீதா நடன கோபால நாயகி மந்திர் நிர்வாகக்குழு,
மற்றும் ஆன்மீக நேயர்களுடன் இந்நூலாசிரியர்.
8—8—1988

நன்றி!

இந்நூல் அரங்கேற்றத்திற்குப்பின், 15—8—1988 தேதியிட்ட ஸ்ரீ முகம் வரப்பெற்றமைக்கு, காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் பொன்னர் திருவடிகளுக்கு அனந்த கோடி நமஸ்காரங்கள்.

—ஆசிரியர்.

ஹரி ஓம்

இந்நூலாசிரியரைப் பற்றி ஸித்தாச்ரம குருஜி.

மதுரை ஸித்தாச்ரமத்தில் 27—7—1986-ல், மத்ய அரசின் தமிழ்நாட்டுச் சிறப்புப் பிரதிநிதி, உயர்திரு. M. பட்டுராஜன், B.A.,B.L. அவர்கள் இந்நூலாசிரியருக்கு 'ஸித்த ஹரிகீதாநந்தா' என்னும் விருதினை வழங்கிய பின்னர், ஸித்தாச்ரம குருஜி அருளாடை ஒன்றைப் போர்த்திப் பாராட்டிப் பேசியதாவது:

'தஞ்சை கே. எச். ராஜாராம் அவர்கள் இயற்றியுள்ள நாலாயிரத்திற்கும் அதிகமானச் சௌராஷ்டிர மொழி ஹரிகீதங்கள் தெய்வீக யருளில் வெளிப்பட்டவை! உலகை சிருஷ்டித்தக் கடவுளுக்குக் 'கவி' என்று ஒரு பெயர். அதுபோல் அந்தச் சிருஷ்டியின் உருவகத்தைக் கற்பனை நயத்துடன் விமர்சிக்கும் காவ்ய கர்த்தாவுக்கும் 'கவி' என்பார்கள்.

மக்களை தெய்வமாக்கும் அற்புத அருளிச் செயல்களை மலர்விக்கும் கவிஞர்கள் வரிசையில் மிளிரத் தகுந்தவரே இந்நூலாசியர்!

சமஸ்கிருத மொழிக்கு முன் மொழிகளாக நின்ற மராட்டி, மாகதீ, சௌரஸேனி, கௌடி, லாடி ஆகிய இவ்வைந்து ப்ராக்ருத மொழிகளில் நடுநாயகமாய் விளங்கும் சௌரஸேனியின் மறுவடிவமான சுந்தரச் சௌராஷ்ட்ர மொழியில், நாலாயிரத்திற்கும் அதிகமான கவிகளைச் செய்துள்ள தஞ்சை (குண்டேன்) கே. எச். ராஜாராம் என்பவர் 'ஹரி'யருள் பெற்றக் கவிஞராவார்.

('சௌராஷ்ட்ர மணி'—1—8—1986)

திருவள்ளுவர் அச்சகம், தஞ்சை. போன்: 20139